**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No,53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**CC.No.352/2025**

PW–1

| | | | |
|---|---|---|---|
| Name | அருள்மோனிஷ்(PW1) | | |
| Father's Name | லோகநாதன் | தொழில் | |
| Village | செம்பியநல்லூர் | | |
| Taluk | அவிநாசி | Age | 23 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th **day of July 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

**1.** நான் மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது நண்பர் ஆவார். எங்களுக்குள் ஏற்பட்ட சிறிய பிரச்சனையை பேசி சமாதானமாக சென்றுவிட்டோம். தேதி நினைவில்லை, போன வருடம் ஒரு நாள். சம்பவம் சம்பந்தமாக நான் அவிநாசி காவல் நிலையம் சென்ற போது போலீசார் என்னிடம் ஒரு கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள்.

**2.** தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. (புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது) தற்போது நானும் எதிரியும் எங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனையை எங்களுக்குள் பேசி சமாதானம் செய்து கொண்டதால் இந்நீதிமன்றத்தில் சமாதான மனுவை தாக்கல் செய்துள்ளேன்.

**3.** என் புகாரின் மீது எந்த மேல் நடவடிக்கையும் வேண்டாம் என்றும் எதிரியை விடுதலை செய்வதில் எனக்கு ஆட்சேபணை ஏதும் இல்லை என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி எனது மகன் தான். எதிரியை விடுதலை செய்வதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |